**சுருக்கம்**

புராதன நகரம் – புதுக்கோட்டை மாவட்டம்– அருள்மிகு ஸ்ரீவிருத்தபுரீஸ்வரர் திருக்கோவில் அமைந்துள்ள திருப்புனவாசல் கிராமத்தை புராதன நகரமாக அறிவிப்பு –ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா–2) துறை**

அரசாணை (நிலை) எண். 159 | நாள்: 18.12.2014
ஜய, மார்கழி 3,
திருவள்ளுவர் ஆண்டு – 2045
படிக்கப்பட்டது:

1. நகர் ஊரமைப்பு ஆணையரின் கடித Roc.No. 14613/05/UP1, நாள் 05.01.2010.
2. புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித ந.க. எண். 16835/2007/வி3 (வளர்ச்சி), நாள் 05.01.2009.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க. எண். 36273/2013, ஊராட்சி 3.3, நாள் 24.03.2014.

-----

**ஆணை:**

15.07.2014 அன்று நடைபெற்ற சட்டமன்றப் பேரவையில் தமிழ்நாடு சட்டமனறப் பேரவை விதி 110–ன் கீழ் திருப்புனவாசல் ஊராட்சியை புராதன நகரமாக அறிவித்து அவ்வூராட்சியின் உட்கட்டமைப்புக்கு ரூ.1 கோடி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

2. இது தொடர்பாக நகர் ஊரமைப்பு ஆணையர், புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள திருப்புனவாசல் ஊராட்சியில் அமைந்துள்ள ஸ்ரீவிருத்தபுரீஸ்வரர் திருக்கோவிலானது மிகவும் வரலாற்று சிறப்புடையதாகவும், பழமை மாறாத தொன்மை உடையதாகவும், இத்தலம் பழங்காலத்தில் புகழ்பெற்ற திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் மற்றும் சுந்தரர் ஆகியோரால் பாடப்பெற்ற புனித ஸ்தலமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், திருப்புனவாசல் திருத்தலத்தினைப்பற்றி தேவாரத்தில் திருநாவுக்கரசு சுவாமிகள் 1 பாடலும், திருஞானசம்பந்தர் 11 பாடல்களும், சுந்தரமூர்த்தி நாயனார் 10 பாடல்களும் பாடியதாக தெரியவருகிறது என்றும், இவ்வூராட்சி சைவ திருமுறைகளில் திருப்புனவாயில் என குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், தற்போதைய நகரமைப்பு முறைகளோடு ஒப்பிடத்தக்க வகையில் இக்கிராமம் பழங்காலத்திலேயே நாற்புறங்களையும் இணைக்கும் வகையில் மாட வளாகத்துடனும், தேரோடும் வீதிகளுடனும் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பாண்டிய நாட்டு சிவத்தலமாக மதுரைக்கு அடுத்த 2–வது தலமாக திருப்புனவாசலில் உள்ள அருள்மிகு ஸ்ரீ விருத்தபுரீஸ்வரர் ஆலயம் உள்ளதாகவும், பாண்டிய மன்னரால் அக்காலத்தில் அமைக்கப்பட்ட ராஜகோபுரம் இருப்பதாகவும், இத்திருத்தலமானது 5 ஏக்கர் பரப்பளவு கொண்டதாக அமைந்துள்ளது என்றும், தஞ்சை பெரிய கோவிலுள்ள ஸ்ரீ பிரகதீஸ்வரர் ஆலயத்திற்கு அடுத்தபடியாக பெரிய சிவலிங்கமானது மேற்காணும் திருத்தலத்தில் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இந்திரன், பிரமன், வாயு, இமயம், சூரியன், சந்திரன், சோமநந்தி, ஐராவாதம், அகத்தியன், செவ்வாய் மற்றும் முப்புரத்தசுரம் முதலியோர் இத்திருத்தலத்தில் வழிபட்டதாகவும், பல்வேறு புண்ணிய தீர்த்தங்கள் அமைந்துள்ளதும் இத்திருத்தலத்தின் சிறப்பம்சமாக கருதப்படுகின்றது என்றும்,

இத்திருப்புனவாசல் திருத்தலத்தில் 1000 வருடம் பழமை வாய்ந்த வன்னிமரம் அமைந்துள்ளதாகவும், ஆண்டிற்கு ஒரு முறை வைகாசி மாதத்தில் விசாகப் பெருந்திருவிழாவானது 11 நாட்கள் சிறப்பாக நடைபெறுவதாகவும் என தெரிவித்து, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பிய கருத்துருவினை பரிந்துரைத்துள்ளார்.

3. மேற்படி, திருப்புனவாசல் ஊராட்சியினை புராதன நகரமாக அறிவித்திட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மற்றும் இந்து சமய அறநிலைய ஆணையர் ஆகியோர் தங்களது பரிந்துரையினை அளித்துள்ளனர். மேலும், சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையங்கள், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மற்றும் நிதி ஆகிய துறைகளும் இசைவளித்துள்ளன.

4. நகர் ஊரமைப்பு இயக்குநரின் செயற்குறிப்பின் மீது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையினை ஏற்று, சட்டமன்றப் பேரவை 110–ன் கீழ் அறிவிப்புக்கிணங்க புதுக்கோட்டை மாவட்டம், அருள்மிகு ஸ்ரீவிருத்தபுரீஸ்வரர் திருக்கோவில் அமைந்துள்ள திருப்புனவாசல் கிராமத்தினை புராதன நகரமாக அறிவித்து ஆணை வெளியிடப்படுகிறது. அதன் பின்னரே அவற்றின் உட்கட்டமைப்புக்கு நகர் ஊரமைப்பு ஆணையரால் நகர் ஊரமைப்பு திட்ட நிதியிலிருந்து ரூ.1 கோடி வழங்கப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ககன்தீப் சிங் பேடி,**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர்,சென்னை– 15.
மாவட்ட ஆட்சியர், புதுக்கோட்டை மாவட்டம்.
<u>நகல்</u>
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை–9
நிதித்( ஊ.வ. (ம) ஊ) / (வீ.வ (ம) ந.வ.) துறை சென்னை–9
சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையங்கள் துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (வ.செ(ம)ஒ / அநமு.2) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்